[5th March 1969

விட்டுவிட வேண்டுமென்ற கண்டிஷன் பேரில் வாடகைக்கு விடப் படுகிறது. அப்படிக் குழந்தைகளுக்கு ஞாயிற்றுகிழமை தோறும் [illegible]க் கொள்வது என்றால் [illegible] விடுவ தென்றும் இருந்தால் லட்சக்கணக்கான [illegible] கிடைக்கும். அதை அரசு ஆராயுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** லாபகரமான யோசனையை சொல்லும்போது அதைப் பரிசீலிக்காமல் அரசு இருக்குமா ?

**THIRUMATHI S. MANJUBHASHINI :** Sir, there was a proposal with the State Government to develop this as a Children's museum and a children's play centre with library and other facilities attached, this being in the heart of the City. May I know from the Hon. the Chief Minister what happened to that proposal?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவைகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் படி இப்போது ஆய்வில் இருந்து வருகின்றன.

### *Books of Subramania Bharathiar.*

*** 124 Q.—THIRU N. R. THIAGARAJAN :** Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of editions published up to 31st March 1968 by the Tamil Nadu Government of the books of Subramania Bharathiyar ;

(*b*) the number of copies sold in each edition ; and

(*c*) the amount of profit gained or loss sustained thereby ?

### பாரதியார் நூல்கள்

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) திரு. சுப்ரமணிய பாரதியார் அவர்களின் நூல்களை தமிழக அரசு 31—3—1968 வரை எத்தனை பதிப்புகள் அச்சிட்டு வெளியிட்டது ?

(இ) எத்தனை பிரதிகள் ஒவ்வொன்றிலும் விற்பனையாயின ?

(உ) இதில் லாபம் அல்லது நஷ்டம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) அரசாங்க அச்சகம் ஐந்து புத்தகங்களை மட்டுமே முதல் வெளியீடாக அச்சிட்டு வெளியிட்டது.

(இ) (i) முப்பெரும் பாடல்கள் என்ற நூல் எத்தனை பிரதி கள் விற்கப்பட்டன என்பது தெரியவில்லை.

( ) பாரதி நூல்கள் (கதைகள்) தொகுதி 187 பிரதிகள்.

(ii) பாரதி நூல்கள் (தத்துவம்) தொகுதி 160 பிரதிகள்.

( ) பாரதி நூல்கள் (சமூகமும் சமயமும்) தொகுதி 199 பிரதிகள்.

5th March 1969]

(v) பாரதி நூல்கள் (அரசியல்) தொகுதி 110 பிரதிகள்.

(உ) அரசாங்கத்தின் ஆணைகளையொட்டி இந்த நூல்கள் அனைத்தும் எல்லா உயர்நிலைப்பள்ளிகளுக்கும் பணம் கட்டிப் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் (வி.பி.பி. மூலமாக) தற்போது அனுப்பப்படுகின்றன. எனவே, ஆதாயத்தையோ அல்லது விரயத்தையோ மதிப்பிட இயலாது.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, அரசாங்கமே மறைந்த மாண்புமிகு முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் நூல்களை மலிவுப் பதிப்பில் அச்சிட்டு வெளியிட முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது அவசரமாக எடுக்கக் கூடிய முடிவல்ல. ஆழ்ந்து யோசித்துச் செய்யப்பட வேண்டிய காரியமாகும்.

*Cashew cultivation*

* 125 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) the total acreage of cashewnut cultivation by the Forest department ;

(b) the total income derived therefrom, for the year 1966-67

(c) the expected income for the year 1967-68; and

(d) the method adopted for realising the income?

முந்திரி தோட்டம்

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) 1967-68 இறுதி வரையில், காடுகள் துறை 26,381 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி பயிரிட்டுள்ளது. 1968-69-ல் கூடுதலாக 1,000 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி பயிரிடத்திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) ரூ. 6,48,460.

(உ) ரூ. 9,19,728.

(எ) முந்திரித் தோட்டங்களிலிருந்து பயன்படு பொருள்களை திரட்டும் உரிமை பொது ஏலத்தில் விற்கப்படுகின்றது. இந்த உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு நியாயமான வகையில் எவரும் முன்வராத இடங்களில் பயன்படு பொருள்களை எடுக்கும் பணியினைக் காடுகள் துறையே மேற்கொள்கிறது.

THIRU D. SANTOSHAM: Sir, cashewnut is supposed to be one of the prime products earning foreign exchange, so far as the State of Kerala is concerned. When these cashewnuts are collected are they sold within the State itself or is any arrangement being made to export them, as is being done in Kerala ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இந்த முந்திரி வைப்பதற்கு ஒரு ஏக்கருக்கு எவ்வளவு செலவாகிறது? மொத்தம் ஒரு ஏக்கரில் வருகின்ற வருமானத்தையும் அதற்காகும் செலவையும் கணக்கிட்டால் லாபகரமாக இருக்கிறதா என்று பரிசீலிக்கப்பட்டதா ?